# தமிழ்மொழி ஆண்டு 5

**வாசிப்பு**

| |
|---|
| **2.4.11 வாசிப்புப் பகுதியிலுள்ள தகவல்களை வகைப்படுத்துவர்.** |

**நடவடிக்கை 1**

வாசிப்புப் பகுதியை வாசித்திடுக.

## தகவல் தொடர்பு சாதனங்கள்

இன்றைய நவீன உலகத்தில் தகவல் தொழில்நுட்பம் பல வளர்ச்சிகளைக் கண்டுள்ளது என்றால் அது மிகையாகாது. இதற்குச் சான்றாக அமைவது தகவல் தொடர்பு சாதனங்களாகும். திறன்பேசி, கணினி, தொலைக்காட்சி மற்றும் வானொலி அவற்றுள் சிலவாகும். இதனால், மனிதர்களுக்குப் பல நன்மைகள் கிடைக்கின்றன.

திறன்பேசிவழி நாம் ஒருவருடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு பேசலாம். இதன் மூலம், நாம் எளிதில் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள இயலும். மேலும், இதன்வழி நாம் குறுஞ்செய்தியை அனுப்பலாம்; குரல் பதிவேற்றம் செய்யலாம்; புகைப்படங்களையும் எடுக்கலாம். அதோடு, இன்றைய தொழில்நுட்பத்தின் துரித வளர்ச்சியினால் இணையத்தொடர்பும் பெற்று மின்வணிகம், மின்னஞ்சல், முகநூல் போன்ற பல சேவைகளைப் பயன்படுத்த முடியும்.

தொடர்ந்து, கணினி தகவல் தொழில்நுட்பத்திற்குத் துணையாக அமைகிறது. இணையத்தின்வழி செய்திகளை விரைவாகத் திரட்டலாம். அதோடு மின்னஞ்சல்வழி தகவல்களைப் பரிமாறலாம். அதுமட்டுமின்றி, ஒரு தகவலைப் பதிவிறக்கம் மற்றும் பதிவேற்றம் செய்ய கணினி துணைபுரிகிறது. மேலும், நம் உறவினர்களோ நண்பர்களோ உலகின் எந்த மூலையில் இருந்தாலும் அவர்களுடைய முகம் பார்த்து உரையாட கணினி உறுதுணையாக இருக்கின்றது.

தகவல் தொடர்பு சாதனங்களில் தொலைக்காட்சியும் வானொலியும் உடனுக்குடன் தற்கால செய்திகளை வழங்குவதில் அக்காலத்திலிருந்தே பெரும்பங்காற்றி வருகின்றன. இதன்வழி தகவல் பரிமாற்றமும் எளிதில் நடைபெறுகிறது. தொடர்ந்து, வியாபாரத் துறையைச் சார்ந்தவர்கள் எளிதில் அறிவிப்புகள் மற்றும் விளம்பரங்கள் செய்யவும் இவை முக்கிய ஊடகங்களாக விளங்குகின்றன. வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் பயனுள்ள கருத்துரைகளையும் கேட்கலாம்; பார்க்கலாம்.


ஆகவே, இத்துணை நன்மைகள் கொண்ட தகவல் தொடர்பு சாதனங்களை மானிடர்களாகிய நாம் அறிவார்ந்த முறையில் பயன்படுத்திப் பயன் அடைய வேண்டும்.

**ஆக்கம் : ஆசிரியர் ரகுனீஸ்வரன் அர்ச்சுணன்**

LIVEWORKSHEETS

பயிற்சி

**வாசிப்புப் பகுதியில் உள்ள தகவல்களை வகைப்படுத்துக.**




| | | |
|---|---|---|
| மின்னஞ்சல்வழி தகவல்களைப் பரிமாறலாம் | தொடர்பு கொள்ளலாம் | செய்திகளைத் திரட்டலாம் |
| மின்வணிகம் | தற்கால செய்திகளை அறியலாம் | அறிவிப்பு அல்லது விளம்பரம் செய்யலாம் |
| தகவலைப் பதிவிறக்கம்/பதிவேற்றம் செய்யலாம் | கருத்துரைகளைக் கேட்டலாம் ; பார்க்கலாம் | புகைப்படம் எடுக்கலாம் |

LIVEWORKSHEETS